# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.299/2020.

Prosecution witness for P.W.1.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. டேவிட். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேலநாட்டார்குளத்தில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன குரு என் தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு குருவின் மனைவி உஷா எ்ன்பவர் தெருவில் பொது தண்ணீர் குழாயிலிருந்து ஹோஸ் பைப் போட்டு தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார். அதற்கு 1, 2 எதிரிகள் நீ எப்படி தனி குழாய் போட்டு தண்ணீர் பிடிக்கலாம் என்று கேட்டார்கள். அப்போது என் தம்பி வந்தவுடன் அவரை பார்த்து ஆஜர் எதிரிகள் தேவ்டியா மகனே உன் பொண்டாட்டியை அடக்கி வைக்க முடியாத என்று சொல்லி குருவையும், உஷாவையும் அடித்துவிட்டார்கள். அதுகுறித்து குரு போலீசில் புகார் கொடுத்திருந்தார். குரு ஊரை காலி செய்துவிட்டு நொச்சிகுளத்திற்கு சென்றுவிட்டார். கொஞ்சநாள் கழித்து ஊருக்கு அவ்வப்போது வந்து செல்வார். அப்போது 1ம் எதிரி குருவை அடிக்கடி முறைத்து பார்ப்பதாக குரு என்னிடம் சொன்னார். நான் குருவிடம் நீ வீட்டிற்கு சென்றுவிடு இங்கு வரவேண்டாம் என்று சொன்னேன். ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை குரு அவர் வீட்டில் இருந்தார். திங்கட்கிழமை புது மோட்டார் வாங்கி அவரது வீட்டில் உள்ள

குழாயுடன் இணைத்தார். அதுகுறித்து 1ம் எதிரி குருவை பார்த்து மோட்டாரை மாட்டி வை உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லியுள்ளார். அதை குரு என்னிடம் வந்து சொன்னார். நான் காவல்நிலையத்திற்கு போ என்று சொன்னேன். நீதிமன்றத்தில் வாய்தா இருப்பதாக சொல்லி நீதிமன்றத்திற்கு குரு சென்றார். 12.12.2018 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் நானும், என் மருமகன் மாரிமுத்துவும் குரு வீட்டிற்கு சென்றோம். அங்கு என் அக்கா ஜெயா, என் தங்கை பரிமளா, அக்கா மகள் தங்கம் ஆகியோர் குரு வீட்டு வாசலில் தெருவில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது தெருவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. நாங்கள் போர்ட்டிக்கோவில் உட்கார்ந்திருந்தோம். பிறகு குரு அங்கு வந்துவிட்டார். அவரை பின் தொடர்ந்து ஆஜர் எதிரிகள் அரிவாளுடன் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது 1ம் எதிரி குருவை பார்த்து தேவ்டியா மகனே எங்களை அடித்துவிட்டு எப்படி நீ ஊருக்குள் வரலாம் என்று சொல்லி 1ம் எதிரி அரிவாளால் குருவின் பின்கழுத்திலும், பின்னந்தலையிலும் தாக்கினார். மேற்படி குரு இருசக்கர வாகனத்தில் அவரது மகனை முன்புறமாக உட்கார வைத்திருந்தபோது 3ம் எதிரி தள்ளிவிட்டு குருவின் இடது காலில் மாறி மாறி வெட்டினார். 3ம் எதிரி முகத்திலும், பின்னந்தலையிலும், வலது தோள்பட்டையிலும் மாறி மாறி வெட்டினார். யாராவது கிட்டே வந்தால் உங்களையும் வெட்டிவிடுவேன் என்று எங்களை பார்த்து கொலைமிரட்டல் விடுத்துவிட்டு மூவரும் கிழக்கு நோக்கி ஓடிவிட்டார்கள். நாங்கள் என் தம்பியை தொட்டு தூக்கினோம். அவர் இறந்துவிட்டார். தலை வெட்டுபட்டு கழுத்து தோல் மட்டும் தொங்கி கொண்டிருந்தது. நானும், மாரிமுத்துவும் காவல்நிலையம் சென்று நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ 1**. போலீசார் சம்பவ இடத்தில் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடனிருந்தேன்.

ஆஜர் எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்திய அரிவாள்கள் **சா.பொ.1 முதல் 3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சா.பொ.1 முதல் 3 போன்ற அரிவாள்கள் கிராமத்தில் எல்லார் வீட்டிலும் இருக்கும் என்றால் சரிதான். எதிரிகள் கையில் மேற்படி அரிவாள்களை பார்த்த பிறகு தற்போதுதான் நீதிமன்றத்தில் அவற்றை பார்க்கிறேன். மேற்படி அரிவாள்களுக்கு குறிப்பிட்ட அடையாளம் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு நான் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் போனேன். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் 2 கி.மீ துாரத்தில் இருக்கும் என்றால் சரிதான். அதனால் இருசக்கர வாகனத்தில் சென்றால் சுமார் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். என் தம்பி இறந்துவிட்டதால் தாமதிக்காமல் உடனே காவல்நிலையம் சென்றுவிட்டேனா என்றால் கொஞ்சநேரம் கழித்து சென்றேன். சுமார் அரைமணி நேரம் கழித்து சென்றேன். நான் காவல்நிலையத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு அதிகாமான காலதாமதத்துடன் சென்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த அரைகுறையாக தெரிந்து கொண்டு மற்றவர்களுடன் ஆலோசித்து புகார் கொடுத்ததால் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான், என் தங்கை பரிமளா, மாரிமுத்து ஆகியோர் என் தம்பியை தொட்டு துாக்கிப் பார்த்தோம். சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஜெயா, பரிமளா, தங்கம், மாரிமுத்து ஆகியோரை விசாரித்தார்கள். இன்றைய வரையில் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. நான் காவல்நிலையத்தில் தலைமை காவலரிடம் சொன்ன சங்கதியை தலைமை காவல் சொல்ல ஒரு பெண் போலீஸ் புகார் வாக்குமூலத்தை தட்டச்சு

செய்தார். காவல்நிலையத்திற்கு என்னுடன் மாரிமுத்து வந்தார். புகார் வாக்குமூலத்தில் மாரிமுத்து சாட்சி கையொப்பமிடவில்லை. இந்த வழக்கு சம்பவத்தை நான் சாட்சிகளாக சொல்லக்கூடிய நபர்களும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி நபர்கள் யாரும் காவல்நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. மாரிமுத்து காவல்நிலையம் வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனக்கு நகல் கொடுத்தார்களா என்றால் அதை வாங்கும் நிலையில் நான் இல்லை. நான் புகார் வாக்குமூலம் கொடுத்த சமயத்தில் புகார் வாக்குமூலத்தை தவிர வேறு எந்த ஆவணத்திலும் கையொப்பமிடவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் முதல் தகவல் அறிக்கையில் கையொப்பமிட்டு நகல் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரில் சுமார் 4, 5 தெருக்கள் உள்ளன. சுமார் 70 வீடுகள் உள்ளன. ஆய்வாளர் என் உடைகளில் ரத்தம்பட்டதா என்று கேட்கவில்லை. யார் உடையிலும் ரத்தம்படவில்லை. நாங்கள் யாரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், அதனால்தான் எங்கள் உடைகளில் ரத்தம்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தில் குருவின் மகன் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் டேங்க் மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்த பையன் உடையில் ரத்தம்படவில்லை என்றால் அவனை தூர தள்ளிவிட்டுவிட்டார்கள். 1ம் எதிரி குருவை வெட்டிய பிறகுதான் குருவின் மகனை 2ம் எதிரி தள்ளிவிட்டதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குருவின் மகனின் உடையில் ரத்தம்படவில்லை. இருசக்கர வாகனத்தில் ரத்தம்பட்டது. போலீசார் வாகனத்தை கைப்பற்றினார்கள். மேற்படி குருவுடன் அவர் மகன் டோனி இருசக்கர வாகனத்தில் வந்ததாக பொய்

சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஸ்ரீவைகுண்டம் நீதிமன்றத்தில் குருவின்மீது அடிதடி வழக்கு இருந்தது. என்மீதும், குருவின்மீதும் பாக்கியராஜ் என்பவர் கொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். குரு எப்போதும் அடாவடியாக பலரிடம் சண்டை போட்டு விரோதத்தை சம்பாதித்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கொலைமிரட்டல் விடுத்ததால் குரு வீட்டை காலி செய்துவிட்டு வேறு ஊருக்கு சென்றுவிட்டார். மேற்படி பாக்கியராஜ் அவரைப்போல வேறு எதிரிகள் மிரட்டலால் அவர் ஊரை காலி செய்துவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகள் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போகவேண்டிய அவசியமில்லை என்றும், நாங்கள் அங்கு போகவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தெரு விளக்கு வெளிச்சத்தில் சம்பவத்தை பார்த்ததாக அ.சா.ஆ1ல் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் அருகில் இரண்டு பக்கமும் வரிசையாக வீடுகள் உள்ளன. அந்த வீடுகளில் இருந்த ஆட்கள் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் கூடினார்கள். சிலுவைமுத்து, விஜய், சூசை, பாக்கியராஜ் ஆகியோர் வீடுகள் குரு வீட்டிற்கு வடபுறமாக உள்ளன. தென்புறமாக ரோசன், 1ம் எதிரி, குமார் ஆகியோர் வீடுகள் உள்ளன. அந்த வீடுகளில் இருந்தவர்களை ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை எங்கு, எப்போது கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நாங்கள் பிரேதத்தை பெறும்போது எதிரிகளை காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள். நாங்கள் போய் பார்த்தோம். எங்கள் முன்பாக எதிரிகளை போலீசார் விசாரிக்கவில்லை. மனோ மற்றும் அருண்பாண்டியன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு தென்புறமாக

குடியிருக்கிறார்கள். அவர்களுக்கும் குருவுக்கும் இடையில் 2018–ல் ஒரு வழக்கும், எதிர் வழக்கும் இருந்தது என்றால் சரிதான். மேற்படி இருவராலும் என் தம்பிக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. போலீசார் பிரேதத்தை சம்பவ இடத்திலிருந்து எப்போது எடுத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை காவல்நிலையத்தில் உட்கார வைத்துவிட்டார்கள். நான்சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றும், அ.சா.ஆ 1–ல் நான் வெற்றுத்தாளில்தான் கையொப்பம் போட்டுக் கொடுத்தேன் என்றும், எதிரிகள்தான் சம்பவத்திற்கு காரணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் அ.சா.ஆ 1 புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் வெளியூரிலும் கட்டுமானத் தொழில் செய்வேன். உள்ளூரிலும் செய்வேன். நான் வெளியூர் சென்ற சமயத்தில்தான் இந்த சம்பவம் நடந்துள்ளது என்றும், நான் சம்பவத்தை கேள்விப்பட்டுத்தான் வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.19 19:35:41 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.299/2020.
Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மாரிமுத்து. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கீழநாட்டார்குளத்தில் குடியிருந்து கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என் தாய்மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும். 2018–ல் என் அத்தை உஷா பொது தண்ணீர் குழாயில் ஹோஸ் பைப் போட்டு தண்ணீர் பிடித்ததால் என் அத்தையை 1, 2 எதிரிகள் அவரை பார்த்து நீ எப்படி தண்ணீர் பிடிக்கலாம் என்று ஏசினார்கள். அங்கிருந்த என் மாமா குருவைப் பார்த்து தேவ்டியா மகனே உன் பொண்டாட்டியை அடக்கி வைக்க முடியாதா கூதிமவனே என்று சொல்லி எதிரிகள் என் அத்தையையும், மாமாவையும் அடித்துவிட்டார்கள். மேற்படி குரு 3ம் எதிரியை குத்திவிட்டதாக ஒரு புகார் கொடுத்தார். குருவும் எதிரிகள் தன்னை தாக்கிவிட்டதாக புகார் கொடுத்தார். பிரச்சனை இருக்கும்போது என் மாமா என் அத்தையுடன் நொச்சிகுளத்திற்கு சென்றுவிட்டார். அவ்வப்போது எங்கள் ஊருக்கும் வருவார். ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை மேற்படி குரு மேலக்காலனியில் அவரது வீட்டில் வந்து தங்கினார். அதுகுறித்து ஆஜர் எதிரிகள் ஜாடைமாடையாக பேசினார்கள். மேற்படி குரு திங்கட்கிழமை அன்று ஒரு புதிய மோட்டார் வாங்கி வந்து அவரது வீட்டில் மாட்டினார். அப்போது எதிரிகள் நீ மோட்டாரை மாட்டி வை உன்னை ஒரு

நாள் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார்கள். செவ்வாய்கிழமை அன்று மேற்படி குருவிற்கு நீதிமன்றத்தில் வாய்தா இருந்தது. அதனால் எதிரிகள்மீது என் மாமா குரு புகார் கொடுக்கவில்லை. 12.12.2018 புதன் கிழமை அன்று இரவு சுமார் 8 மணியளவில் நானும், அ.சா1ம் மேற்படி குரு வீட்டிற்கு சென்றோம். அப்போது என் தாயார் பரிமளா, ஜெயா மற்றும் தங்கம் ஆகியோர் குரு வீட்டிற்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது தெருவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்போது நானும், அசா.1ம் போர்ட்டிக்கோவில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்போது மணி 8.55 மணியிருக்கும். அப்போது மேற்படி குரு தன் மகன் டோனியை டேங்கில் உட்கார வைத்துக் கொண்டு வந்து வீட்டு வாசலில் இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். அப்போது ஆஜர் எதிரிகள் அரிவாள்களுடன் ஓடி வந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் என் மாமா குருவைப்பார்த்து தேவ்டியா மகனே எங்களை அடித்துவிட்டு எப்படி ஊருக்குள் வரலாம் என்று சொல்லி 1ம் எதிரி அரிவாளால் குருவின் கழுத்தின் பின்புறம், தலையின் பின்புறம் வெட்டினார். 2ம் எதிரி மேற்படி டோனியை இருசக்கர வாகனத்திலிருந்து கீழே தள்ளிவிட்டு குருவின் இடது முழங்காலில் மாறி மாறி வெட்டினார். 3ம் எதிரி குருவின் முகத்திலும், பின்னந்தலையிலும், வலது தோள்பட்டையிலும் மாறி மாறி வெட்டினார். நாங்கள் பிடிக்கலாம் என்று போனோம். வந்தால் உங்களையும் வெட்டுவோம் என்று மிரட்டிவிட்டு எதிரிகள் கிழக்கு நோக்கி ஓடிவிட்டார்கள். நான் என் மாமாவை சென்று பார்த்தபோது அவருக்கு உயிர் இல்லை. அதுகுறித்து நானும், அ.சா.1ம் காவல்நிலையம் சென்று அசா1 புகார் கொடுத்தார். என்னை வெளியே உட்கார சொல்லிவிட்டார்கள். மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

காவல்நிலையத்தில் போலீசார் என்னையும், அ.சா.1—ஐயும் உட்கார வைத்துவிட்டார்கள். புகார் கொடுத்தவுடன் போலீசார் சம்பவ இடத்திற்கு போனார்கள். என்ன பதவியில் இருந்த போலீசார் என்று எனக்கு தெரியாது. இரவு சுமார் 10.45 மணியளவில் என்னையும், அ.சா.1—ஐயும் போலீசார் விட்டுவிட்டார்கள். நாங்கள் இருவரும் சம்பவ இடத்திற்கு போகும்போது அங்கு யாரும் இல்லை. போலீசார் பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அன்றைய தேதியில் போலீசார் எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை. எந்த பதவி நிலையில் இருந்த போலீசார் மறுநாள் என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மற்ற சாட்சிகளை போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. எந்த சாட்சி உடையிலும் ரத்தம் இல்லை. நான் குருவின் உடலை தொட்டுப்பார்த்தேன். என் உடையில் ரத்தம்படவில்லை. மேற்படி டோனி உடையிலும் ரத்தம்படவில்லை. போலீஸ் விசாரணையில் தெருவிளக்கு வெளிச்சத்தில் சம்பவத்தை பார்த்தாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சாட்சியும் குருவின் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. குரு தன் மகனை இருசக்கர வாகனத்தில் வைத்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டு வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 உடன் காவல்நிலையத்திற்கு சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 யாரிடம் வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் காவல்நிலையத்திற்கு வெளியில்தான் உட்கார்ந்திருந்தேன். நான் 15 வயது சிறுவன் என்பதால் காவல்நிலையத்திற்கு வெளியே உட்கார வைத்தார்கள். அதனால் போலீசார் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், நான் பார்த்ததை முதன்முதலாக நீதிமன்றத்தில்தான்

சொல்கிறேன் என்றும் சொன்னால் சரிதான். அ.சா.1 தூண்டுதன்பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.19 19:35:50 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.299/2020.
Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. ஜெயா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கீழநாட்டார்குளத்தில் குடியிருந்து கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி. அ.சா.2 என் தங்கை மகன். இறந்துபோன குரு என் தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு என் தம்பி குரு ஹோஸ் பைப் போட்டு பொது தண்ணீர் குழாயிலிருந்து தண்ணீர் பிடித்தார். அப்போது ஆஜர் எதிரிகள் மேற்படி குருவையும், அவரது மனைவியையும் கூதிமவனே இங்கு வந்து தண்ணீர் பிடிக்கிறாயா என்று சொல்லி சண்டை போட்டார்கள். பின்னிட்டு ஞாயிற்றுக் கிழமையன்று மேற்படி குரு ஊருக்கு வந்து திங்கட்கிழமை அன்று வீட்டில் புது மோட்டாரை மாட்டினார். அப்போது ஆஜர் எதிரிகள் குருவைப் பார்த்து உன்னை துண்டு துண்டாக வெட்டிவிடுவோம் என்று மிரட்டினார்கள். செவ்வாய்கிழமை அன்று நீதிமன்றத்தில் குருவுக்கு வாய்தா இருந்தது. வாய்தாவிற்கு சென்றுவிட்டு வந்தார். புதன்கிழமை இரவு சுமார் 8.30 மணியளவில் குரு வீட்டிற்கு மேற்குபுறமாக தெரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. என் தம்பி குரு தன் மகனுடன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தான். நான் கட்டுமான வேலை முடித்துவிட்டு எப்போதும் போல அங்கு சென்று கொண்டிருந்தேன்.

அப்போது 1ம் எதிரி குருவின் கழுத்தில் பின்புறத்தில் மாறி மாறி வெட்டினார். 3ம் எதிரி அரிவாளால் குருவின் இடது முழங்காலில் வெட்டினார். 2ம் எதிரி முகத்திலும், கழுத்திலும் மாறி மாறி வெட்டினார். எதிரிகள் அரிவாளால் குருவை மாறி மாறி வெட்டினார்கள். மேற்படி குரு இறந்துவிட்டார். குருவை வெட்டிய எதிரிகள் எங்களை பார்த்து நீங்கள் வந்தால் உங்களையும் வெட்டுவோம் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்கள். அதுகுறித்து அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் சொன்னேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

போலீசார் எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. பிரேதத்தை எப்போது எடுத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் எந்த சாட்சியை எப்போது எங்கு விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை எந்த சந்தர்ப்பத்திலும், எந்த போலீசாரிடமும் சொல்லவில்லை. அங்கிருந்த நானோ மற்ற சாட்சிகளோ மேற்படி குருவை தொட்டு தூக்கவில்லை. குருவின் மகன் டோனிமீது ரத்தம்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. குருவின் இருசக்கர வாகனத்தில் இரத்தம்பட்டதா என்றால் பட்டிருக்கலாம். விளக்கு வெளிச்சம் இருந்ததாக முதன்முதலாக நீதிமன்றத்தில்தான் சொல்கிறேன்

என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் குரு வீட்டிற்கு போகவில்லை என்றும், எந்த சாட்சியும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், குருவிற்கு ஏராளமான விரோதிகள் இருப்பதால் வேறு எந்த வகையிலோ காயமடைந்து இறந்துள்ளார் என்றும், நாங்கள் பின்னிட்டு தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு சென்று அவரது உடலை பெற்றுக் கொண்டோம் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.19 19:35:59 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.299/2020.
Prosecution witness for P.W.4.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. தங்கம். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சவலைக்காரன் குளத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.3 என் தாயார். அ.சா.1 என் மாமா. அ.சா.2 என் சித்திமகன். இறந்துபோன குரு என் தாய்மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு என் அத்தை உஷா என்பவர் பொது தண்ணீர் குழாயில் ஹோஸ் போட்டு தண்ணீர் பிடித்தார். அதுகுறித்து 1, 2 எதிரிகள் மேற்படி உஷாவிடம் சண்டை போட்டார்கள். என் மாமா குரு வந்தபிறகு அவரை பார்த்து உன் பொண்டாட்டியை அடக்க மாட்டியா தேவ்டியா பையளே என்று ஏசினார்கள். என் அத்தை மற்றும் மாமாவை எதிரிகள் மூவரும் சேர்ந்து அடித்துவிட்டு எதிரிகளே தங்களை குத்திக் கொண்டு என் மாமா மீது புகார் கொடுத்துவிட்டார்கள். என் மாமா நொச்சிகுளத்தில் குடியிருந்து வந்தார். அடிக்கடி என் மாமா வீட்டிற்கு நாட்டார்குளத்திற்கு வந்து சென்று கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் என் மாமாவை முறைத்துக் கொண்டிருந்ததாக சொன்னார். பின்னர் மீண்டும் ஞாயிற்று கிழமை அன்று என் மாமா அவரது வீட்டிற்கு வந்தபோது திங்கட்கிழமை அன்று வீட்டில் புதுமோட்டார் மாட்டினார். அப்போது ஆஜர் எதிரிகள் அவரை பார்த்து உன்னை துண்டு துண்டாக

வெட்டிவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதுகுறித்து என் மாமா குரு எங்களிடம் சொன்னார். அதுகுறித்து புகார் கொடுக்க வேண்டுமென்று அ.சா.1 சொன்னார். மறுநாள் செவ்வாய்கிழமை குருவிற்கு நீதிமன்றத்தில் வாய்தா இருந்தது. பிறகு புதன் கிழமை அன்று 12.12.2018 அன்று இரவு சுமார் 8 மணியளவில் மேற்படி குருவை பார்ப்பதற்காக நான், அ.சா.3 மற்றும் என் சித்தி பரிமளா ஆகியோர் குரு வீட்டிற்கு சென்றோம். என் மாமா வீட்டிற்கு வடபுறமாக தெருவில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்போது அ.சா.1, 2 குருவை பார்க்க வந்தார்கள். அ.சா.1 தம்பி எங்கே என்று கேட்டார். வருவான் இரு என்று அ.சா.3 சொன்னார். சுமார் 8.30 மணியளவில் அ.சா.1 வந்தார். போர்ட்டிக்கோவில் அ.சா.1, 2 உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது தெரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. என் மாமா குருவும், அவரது மகன் டோனியும் சுமார் 8.55 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அப்படி வரும்போது மேற்படி குரு காலை ஊன்றக்கூட இல்லை. அப்போது ஆஜர் எதிரிகள் தேவ்டியா மகனே இந்த ஊருக்கு மறுபடி வருவாயா என்று சொல்லி 1ம் எதிரி குருவின் கழுத்தின் பின்புறம் மற்றும் தலையின் பின்புறம் அரிவாளால் மாறி மாறி வெட்டினார். 3ம் எதிரி குருவின் மகனை கீழே தள்ளி விட்டுவிட்டு குருவின் இடது முழங்காலில் அரிவாளால் வெட்டினார். 2ம் எதிரி குருவின் தலையின் பின்பகுதியிலும், வலது தோள்பட்டையிலும் அரிவாளால் வெட்டினார். நாங்கள் கிட்டே வந்தால் எங்களையும் வெட்டி விடுவதாக எதிரிகள் மிரட்டிவிட்டு கிழக்குநோக்கி ஓடிவிட்டார்கள். சா.பொ. 1 முதல் 3 தான் எதிரிகள் பயன்படுத்திய அரிவாள்கள். போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் மறுநாள் சம்பவ இடத்தில்தான் என்னை விசாரித்தார்கள். காலை சுமார் 9 மணியளவில் விசாரித்தார்கள். போலீசார் என்னை சும்மா கேட்டார்கள். எந்த பதவி நிலையில் இருந்த போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சின்ன போலீசார் விசாரித்தார்கள். அவர்கள் சீருடையில் இல்லை. சாதாரண உடையில் இருந்தார்கள். வாய்மொழியாக கேட்டுவிட்டு போய்விட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று இரவு சுமார் 9.45 மணியளவில் போலீசார் வந்து பிரேதத்தை எடுத்து மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். பிரேதத்தை எடுத்துச் செல்லும்போது போலீசார் அங்கு இருந்த யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அக்கம் பக்கம் இருந்த வீடுகளில் யாரையாவது விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அரிவாள்களில் குறிப்பிட்ட அடையாளம் இல்லை என்றால் சரிதான். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னை திருநெல்வேலி மாவட்டம் சவலைக்காரன் குளத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், மேற்படை சவலைக்காரன் குளத்தில்தான் இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. குரு வீட்டிற்கு அடுத்த மேற்கு உள்ள வீடு 1ம் எதிரியின் வீடு என்றால் சரிதான். ஹோஸ் பைப் போட்டு தண்ணீர் பிடித்ததற்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் இடையில் ஆறுமாத காலம் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி குருவிற்கு உள்ளூரில் பல வழக்குகள் உள்ளன என்றும், பல விரோதிகளும் இருக்கிறார்கள் என்றும், அதனால்தான் அவர் வெளியூருக்கு சென்றுவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி குரு ரகசியமாக தனியாக ஊருக்கு வந்த சமயத்தில் வேறு விரோதிகளால் தாக்கப்பட்டுள்ளார் என்றும், பின்னிட்டு ஆலோசனையின் பேரில் எதிரிகள்மீது பதிவு செய்யப்பட்ட பொய்

வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் அ.சா.1 இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு நேராக காவல்நிலையம் சென்றுவிட்டார் என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.03.19 19:36:09 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.